# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி,B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் வியாழக்கிழமை**

(திருவள்ளுவர் ஆண்டு 2057, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 12–ம் நாள்)

**அசல் வழக்கு எண். 03/2026**
**CNR.No.TNKI13-000007-2026**

U. ரிஸ்வான் ...வாதி

//எதிர்//

நஜ்மா ...பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 17.03.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. சசிகுமார், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் செல்வி. M. இந்து, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 10.12.2020–ம் தேதியில் ஊத்தங்கரை வட்டம் மற்றும் நகரில் உள்ள ஸ்ரீவாரி மஹால் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இருவருக்கும் விவாகரத்து வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்குரையின் சுருக்கம்:**

2(i). பிரதிவாதி வாதியின் சட்டபூர்வ மனைவி. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இஸ்லாமிய முறைப்படி கடந்த 10.12.2020-ம் தேதியில் ஊத்தங்கரையில் உள்ள ஸ்ரீவாரி மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. இத்திருமண உறவின் மூலமாக இருவருக்கும் கடந்த 03.12.2021-ம் தேதியில் தருமபுரியில் உள்ள செயிண்ட் மேரிஸ் மருத்துவமனையில் முகமது அர்சலான்ரி என்கிற ஆண் குழந்தை பிறந்துள்ளது. இத்திருமணம் இன்றும் அமலில் உள்ளது. இத்திருமணம் ஊத்தங்கரை சார்பதிவகத்தில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. திருமணத்திற்கு பின்பு வாதியும் பிரதிவாதியும் சாமல்பட்டியில் உள்ள வாதியின் வீட்டில் சேர்ந்து வசித்து வந்தனர். குழந்தை பிறப்பிற்கு பின்பு பிரதிவாதி யாதொரு நியாயமான காரணமுமின்றி அவரது பெற்றோர் வீட்டிலேயே நிரந்தரமாக வசித்து வருகிறார்.

2(ii). வாதி பலமுறை அழைத்தும் பிரதிவாதி வரமறுத்து அவரது பெற்றோர்களுடனே இன்றும் வசித்து வருகிறார். பிரதிவாதி வாதியின் சட்டபூர்வ மனைவி என்கிற நிலையில் வாதிக்கு செய்யவேண்டிய யாதொரு சவரட்சணைகளையும் செய்யாமல் தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். பிரதிவாதியின் இத்தகைய செயல்களினால் வாதிக்கு சட்டபூர்வமாக பிரதிவாதியிடமிருந்து கிடைக்க வேண்டிய தாம்பத்ய உறவு உள்ளிட்ட யாதொரு உரிமையையும் அனுபவிக்க இயலவில்லை. இதனால் வாதியும் அவரது பெற்றோர்களும் உடளவிலும் மனதளவிலும்

பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் மன உளைச்சலுடன் வாழ்ந்து வருகின்றனர்.

2(iii). வாதியை பிரதிவாதி இவ்வளவு கொடுமைபடுத்தியும், பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ விரும்பிய வாதி அவரது பெற்றோர்களுடன் சேர்ந்து பிரதிவாதி வீட்டிற்கு சென்று பிரதிவாதியை வாதியுடன் சேர்ந்து வாழ அழைத்தனர், ஆனால் பிரதிவாதியோ இனி உன்னுடன் வாழ மாட்டேன் என்று வாதியை அசிங்க படுத்தி அனுப்பிவிட்டார். எனவே இனியும் வாதி பிரதிவாதியுடன் சேர்ந்து வாழும் சூழல் இல்லை. எனவே வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 10.12.2020–ம் தேதியில் ஊத்தங்கரை வட்டம் மற்றும் நகரில் உள்ள ஸ்ரீவாரி மஹால் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இருவருக்கும் விவாகரத்து வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

3(i). பிரதிவாதி, வாதியின் வழக்கு சங்கதிகளை மறுத்துரைத்தும் பிரதிவாதியையும் மற்றும் குழந்தையையும் சட்டப்படி பராமரிக்க வேண்டிய கடமை வாதிக்கு உள்ளபோதும் யாதொரு பராமரிப்பையும் இன்றுவரை செய்ததில்லை. இதன்படியாக வாதி அவரது சட்டபூர்வ கடமையிலிருந்து தப்பித்துகொள்ள வேண்டி மட்டுமே எதிர்மனுதாரருக்கு எதிராக வீண் பழியை சுமத்தி பல பொய் மற்றும் கற்பனை சங்கதிகளுடன் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிக்கு வாதியுடன் கூடிய கருத்து வேறுபாட்டின் காரணமாக இனியும் சேர்ந்து வாழ வழி இல்லை. எனவே வாதிக்கும், பிரதிவாதிக்குமிடையே கடந்த 10.12.2020-ம் தேதியில்

ஊத்தங்கரை வட்டம் மற்றும் நகரில் உள்ள ஸ்ரீவாரி மஹால் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து இருவருக்கும் விவாகரத்து வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறபிப்பதில் இந்த பிரதிவாதிக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

வழக்குரை, பதிலுரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்த பிறகு கடந்த 24.02.2026 தேதியன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:

(1) Whether allegation against defendant as pleaded by plaintiff is true?

(2) Whether plaintiff entitled to relief of dissolve the marriage between plaintiff and defendant?

(3) To what other reliefs?

**5. சாட்சியம்:**

5(i). வாதி தரப்பில், வாதி திரு. ரிஸ்வான், **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.7** வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5(ii). பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி திருமதி. நஜ்மா, **பி.வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார், ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**விவாதம்:**

6. **<u>எழுவினா 1–க்கான தீர்வு:</u>** வாதி இந்த வழக்கை தனக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 10.12.2020 தேதியில் இஸ்லாமிய முறைப்படி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க வேண்டி

தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்குப்படி வாதிக்கும் பிரதிவாதிக்கும் கடந்த 10.12.2020 தேதியில் ஊத்தங்கரையில் உள்ள ஸ்ரீவாரி மஹாலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் பயனாக இருவருக்கும் கடந்த 03.12.2021 தேதியில் முகமது அர்சலான்ரி என்ற ஆண் குழந்தை பிறந்தது. இந்த திருமணம் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. குழந்தை பிறந்த பின்பு பிரதிவாதி எந்தவித நியாயமான காரணமுமின்றி பெற்றோர் வீட்டிலேயே நிரந்தரமாக வசித்து வருகிறார். அதனால் பிரதிவாதியிடமிருந்து சட்டபூர்வமான மனைவி என்ற வகையில் தனக்கு கிடைக்க வேண்டிய எந்த சவரட்சனையும் கிடைக்கவில்லை. அவரை பலமுறை அழைத்தும் சேர்ந்து வாழ மறுத்து வாதியை அசிங்கப்படுத்தி அனுப்பிவிட்டார் எனவே பிரதிவாதியுடன் சேர்ந்து வாழும் சூழ்நிலை இல்லை என்பதால் அவரிடம் இருந்து விவாகரத்து கோரி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் இருவருக்கும் நடைபெற்ற திருமணங்கள் குறித்தும் குழந்தை பிறந்தது குறித்தும் எந்தவித மாற்று கருத்தும் இல்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் வாதி கூறியுள்ள குற்றச்சாட்டுகள் மறுக்கப்பட்டு வாதி பிரதிவாதியையும் குழந்தையையும் பராமரிக்காமல் இருந்து வருகிறார் என்றும் பொய்யான கற்பனை சங்கதிகளுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் இருவருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடின் காரணமாக இனியும் இருவரும் சேர்ந்து வாழ வழி இல்லை என்றும் இருவருக்கும் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து

விவாகரத்து வழங்க ஆட்சேபனை இல்லை என்று கூறி பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

8. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்து கொண்டு சாட்சியமளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் வழக்கில் பிரதிவாதி மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தையும் முன்னிறுத்தி முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அந்த குற்றச்சாட்டுகளை மறுத்துறைத்து பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட போதிலும் அது தவறு என்று கூறி வாதியின் சாட்சியத்தை பொய்ப்பிக்கும் வகையில் வாதியை குறுக்கு விசாரணை செய்து அந்த சாட்சியத்தை பொய்ப்பிக்க எந்தவித முயற்சியும் பிரதிவாதி தரப்பில் செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டுள்ளது.

9. வாதி தரப்பில் இருவருக்கும் கடந்த 10.12.2020 தேதியில் நடைபெற்ற திருமணத்தின் திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது குறித்து இந்த வழக்கில் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார். வாதி மற்றும் பிரதிவாதியின் ஆதார் அட்டைகள் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குழந்தையின் பிறப்புச் சான்று வா.சா.ஆ.5 ஆகவும் குழந்தையின் ஆதார் அட்டை வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை பிரதிவாதி மறுக்கவில்லை. வாதி தாவாவில் கூறியிருந்த குற்றச்சாட்டை மட்டுமே மறுத்துள்ள நிலையில் வாதியை குறுக்கு

விசாரணை செய்து அந்த குற்றச்சாட்டு பொய் என்று நிரூபிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் வாதி தாவாவில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. மேலும் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக முன்னிலையாகி சாட்சியமளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் "**கடந்த 11.03.2026 தேதியில் வாதி தனக்கும் தன்னுடைய குழந்தையின் வாழ்வாதாரத்திற்காகவும் ஒரு தான செட்டில்மெண்ட் மூலம் சொத்துக்களை பாத்தியப்படுத்தி சுவாதீனம் கொடுத்துள்ளார்**" என்று சாட்சியமளித்து, அவர் மூலம் வா.சா.ஆ.7 ஆக வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் "**திருமணத்தின் பின்னிட்டு இறுதியாக வாதியும் பிரதிவாதியும் சாமல்பட்டி வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான் என்றும், பிரசவத்திற்காக எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று அதன் பின்னிட்டு இதுநாள் வரை வாதியின் வீட்டிற்கு திரும்பவில்லை என்றால் சரிதான் என்றும், நான் வரவில்லை என்பதால் வாதியும் அவரது பெற்றோர்களும் ஊர் பொதுமக்களும் என்னை சேர்ந்து வாழ அழைத்தார்கள் என்று சொன்னால் சரிதான் அதற்கு அவருடன் வாழ விருப்பமில்லை என்று நான் தன்னிச்சையாக முடிவு செய்து தனியாக வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான்**" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேற்படி சங்கதிகளில் இருந்து சட்டப்படியான மனைவி என்ற முறையில் வாதியுடன் பிரதிவாதி சேர்ந்து வாழ மறுத்து தன்னிச்சையாக பிரிந்து வாழ்ந்து வருகிறார். இதனால் வாதி மன உளைச்சலில் இருந்து வருகிறார் என்றும், வாதி தரப்பு வாதம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. சேர்ந்து வாழாததன் காரணமாக நான் விவாகரத்து வழங்க கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான் என்றும் அவர் விவாகரத்து வழங்க ஆட்சேபனை இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் தனக்கு சேர வேண்டிய பொருட்கள் எதுவும் வாதியின் வசம் இல்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார். தங்களுக்கு தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ள சொத்தின் மதிப்பு சுமார் 5 கோடி இருக்கும் என்றால் சரிதான் என்றும் தனக்காகவும் தனது மகனுக்காகவும் இனி ஜீவனாம்சம் எதுவும் கோருவதில்லை என்றும் கூறி விவாகரத்து வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சாட்சியமளித்துள்ளார். இந்த சூழ்நிலையில் வாதி கோரியவாறு விவாகரத்து வழங்குவதே நியாயமானது என்றும் வாதியின் குற்றச்சாட்டு உண்மை என்று நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

12. **<u>எழுவினா 2-க்கான தீர்வு:</u>** வாதி மேற்படி வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக எழுவினா 1-க்கு தீர்வு காணப்பட்டுள்ளதாலும் இனியும் வாதியுடன் சேர்ந்து வாழ முடியாது, விவாகரத்து வழங்க தனக்கு ஆட்சேபனை இல்லை என்று பிரதிவாதி தனது பதிலுரையிலும் தனது சாட்சியத்திலும்

கூறப்பட்டுள்ளதாலும் வாதி கோரியவாறு விவாகரத்து பெற வாதி உரிமையானவர் என்று இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

13. **<u>எழுவினா 3-க்கான தீர்வு:</u>** எழுவினா 1, 2-ல் வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதிக்கு கிடைக்கக்கூடிய வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லை என்றும், தரப்பினர்களின் உறவு நிலையை கருத்தில் கொண்டும், வழக்கின் சூழ்நிலையையும் கருத்தில் கொண்டும், தரப்பினர்கள் அவரவரது செலவுத்தொகைகளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இந்த எழுவினாவிற்கு தீர்வுக்காணப்படுகிறது.

**முடிவாக,** தாவா அனுமதிக்கப்பட்டு வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கடந்த 10.12.2020 தேதியில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா. 1 : திரு. ரிஸ்வான் (வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.12.2020 | திருமண அழைப்பிதழ் | அசல் |
| வா.சா.ஆ.2 | -- | புகைப்படம் | அசல் |
| வா.சா.ஆ.3 | -- | வாதியின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.4 | -- | பிரதிவாதியின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.5 | 03.12.2021 | குழந்தையின் பிறப்பு சான்று | கணினி நகல் |
| வா.சா.ஆ.6 | -- | குழந்தையின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| வா.சா.ஆ.7 | 11.03.2026 | தான செட்டில்மென்ட் பத்திரம் (ஆவண எண்.1891/2026) | சான்றிட்ட நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சி:</u>**

பி.வா.சா. 1 : திருமதி. நஜ்மா (பிரதிவாதி)

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**இல்லை

**<u>நீதிமன்ற ஆவணங்கள்:</u>** இல்லை

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை